Under Section 173 BNSS
(signature)

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8120342

1. District மாவட்டம் : விழுப்புரம் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 14 Date: நாள் 08.11.2024

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act Sections பிரிவுகள்: 7 of PC Act
(ii) Act சட்டம்: 1988 as amended Act. 2018 Sections பிரிவுகள்: 106 BNSS
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 07.11.2024 Date from நாள் முதல் Date to நாள் வரை
Time Period : நேர அளவு Time from நேரம் முதல் 16.15 Time to : நேரம் வரை 23.00
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.11.2024 Time நேரம் 00.30
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.11.2024 Time நேரம் 01.00

4. Type of Information : Written/ Oral
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 30 km வடக்கில்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address முகவரி மயிலம் சார்பதிவாளர் அலுவலகம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் G. ராணி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் (g) Address : முகவரி மாவட்ட மேற்பார்வை அலுவலர். கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) மயிலம் சார்பதிவாளர் திருமதி. வை. வெங்கடேஸ்வரி 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு. வீரபத்திரன் 3) அலுவலக உதவியாளர் ஜெ. பாலசுப்ரமணியன் 4) கேமரா ஆபரேட்டர் திரு. மு. கணேசன் 5) புரோக்கர் திரு. செல்வம் த/பெ ராதாகிருஷ்ணன், ராகவேந்திரா நகர், சித்தேரிக்கரை விழுப்புரம். 6) புரோக்கர் திரு. சரவணன் த/பெ மனோகரன், சன்னதி தெரு. மயிலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- தாமதமில்லை.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

–

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு –

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் –

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

8/11/24 08/11/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

08.11.2024

Name: பெயர் G. சந்திரசேகரன்,
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
விழுப்புரம்.

பணிந்து அனுப்பப்படுகிறது. அம்மையீர், நான் இன்று 08.11.2024-ம் தேதி அதிகாலை 00.30 மணியளவில் நிலைய அலுவலில் இருந்தபோது விழுப்புரம், கடலூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் G.ராணி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று இன்று 08.11.2024-ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு விழுப்புரம் ஊ.த.க பிரிவு குற்ற எண் 14/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. வாதி கொடுத்த புகார் மனுவின் விபரம், அனுப்புநர்,G.ராணி,மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டம்,கடலூர்.பெறுநர்,காவல் துணை கண்காணிப்பாளர்அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விழுப்புரம். ந.க.எண்.அ/565/2024, நாள் 07.11.2024. அய்யா, பொருள் திடீர் ஆய்வு - விழுப்புரம் மாவட்டம் - மரக்காணம் சார்பதிவாளர் அலுவலகம் - 07.11.2024 அன்று விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு - காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டது - புகார் அளித்தல் - தொடர்பாக:- பார்வை திடீர் ஆய்வு மகஜர் நாள் - 07.11.2024. 07.11.2024-ஆம் தேதி திருமதி.G.ராணி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் ஆகிய நான் எனது அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவுக்கு வரும் பொது மக்களிடம் ஆவண எழுத்தர்கள் மூலமும், புரோக்கர்கள் மூலமும் இலஞ்சம் பெறுவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் நான் விழுப்புரம் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவுக்கு சென்று அங்கு பணியில் இருந்த காவல் துணை கண்காணிப்பாளர் திரு.G.அழகேசன் அவர்களிடம், மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீராய்வு செய்வது குறித்து கலந்தாலோசித்து அதன்படி நானும் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் குழுவினரும் உடனடியாக இரண்டு வாகனங்களில் புறப்பட்டு சுமார் 18.15 மணியளவில் மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினுள் சென்று அங்கிருந்தவர்களிடமும் சார்பதிவாளர் அவர்களிடமும் எங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு அவர்களிடம் அலுவலகத்தை திடீராய்வு செய்யப்போவதாக தெரிவித்துவிட்டு பின்னர், அவர்கள் முன்னிலையில் எங்களை சுய பரிசோதனை செய்த பின்பு மேற்படி அலுவலகத்தில் உள்ளவர்களையும், அலுவலகத்தையும் சோதனை செய்தபோது, பின்னர் விசாரித்து தெரிந்த 1)திருமதி.வெ.வெங்கடேஸ்வரி, மயிலம் சார்பதிவாளர் அவர்கள் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்தார்.2)அவருக்கு இடது புறத்தில் வடக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு.ஹ.வீர அப்துல்லா அமர்ந்திருந்தார். 3)சார்பதிவாளருக்கு எதிரில் கிழக்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் அலுவலக உதவியாளர் திரு.ஜெ.பாலசுப்ரமணியன் அமர்ந்திருந்தார். 4) சார்பதிவாளருக்கு பின்புறம் உள்ள கணினி அறையில் இளநிலை உதவியாளர் திருமதி. வி.நளினி என்பவர் மேற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியிலும் 5)அவருக்கு இடது புறத்தில் தெற்கு நோக்கி போடப்பட்டிருந்த நாற்காலியில் கேமரா ஆபரேட்டர் திரு.பூ.கணேசன் அமர்ந்திருந்தார். 6)சார்பதிவாளர் மேஜைக்கு எதிரில் அலுவலக உதவியாளர் பணிக்கு சார்பதிவாளர் அவர்களால் தன்னிச்சையாக பணிக்கு அமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஒய்வு பெற அனுமதிக்கப்படாத திரு.ஜெயரட்சகன் த.பெ ஆதிமூலம், குன்னம், பெரும்பாக்கம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்பவர் தெற்கு நோக்கியவாறு போடப்பட்டிருந்த ஸ்டூலில் அமர்ந்திருந்தார். சார்பதிவாளர் இருக்கைக்கு நேர் எதிரே புரோக்கர்கள் 7)திரு.செல்வம் த.பெ ராதாகிருஷ்ணன், ராகவேந்திரா நகர், சித்தேரிக்கரை, விழுப்புரம் 8)திரு.சரவணன் த.பெ மதுரைவீரன், சன்னதி தெரு, மயிலம் மற்றும் தனிநபர்கள் 9)திரு.வெங்கடேசன் த.பெ நாகப்பன், தென்புத்தூர், செஞ்சி வட்டம் 10)திரு.முனுசாமி த.பெ கண்ணையன் கூட்டேரிப்பட்டு, 11)திரு.ராமகிருஷ்ணன் த.பெ ராமசாமி, நெடிமொழியனூர், திண்டிவனம் வட்டம் ஆகியோர் நின்றிருந்தனர். அதன் பிறகு நான், மேற்படி நபர்களை அவரவர்கள் இடத்தில் இருக்கும்படி அறிவுறுத்தினேன். பின்னர் எனது அறிவுறுத்தலின்படி காவல் குழுவினர் மேற்படி அலுவலகத்தையும், அங்கிருந்தவர்களையும் சோதனை செய்தபோது கீழ்கண்டவகையில் கணக்கில் வராத பணம் கைப்பற்றப்பட்டது. திடீராய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத ரொக்கப் பணம் விவரம்: 1)திருமதி.வெ.வெங்கடேஸ்வரி, மயிலம் சார்பதிவாளர் அவர்களை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.700 பணம் இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் மேற்படி பணம் சரியாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி தொகைக்கு தக்க முகாந்திரம் கூறியதால் ரூ.700 பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு.ஹ.வீர அப்துல்லா என்பவரை சோதனை செய்தபோது, ரூ.360 பணம் இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க, அதில் ரூ.500 பணம் குறிப்பிடப்பட்டு இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக உள்ளது குறித்து விசாரிக்க தக்க முகாந்திரம் கூறியதால் ரூ.360 பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 3) அலுவலக உதவியாளர் திரு.ஜெ.பாலசுப்ரமணியன் என்பவரை சோதனை செய்தபோது ரூ.350 பணம் இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க, அதில் ரூ.400 பணம் குறிப்பிடப்பட்டு இருந்தது. இது முன்னுக்குபின் முரணாக உள்ளது குறித்து விசாரிக்க தக்க முகாந்திரம் கூறியதால் ரூ.350 பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 4) இளநிலை உதவியாளர் திருமதி. வி.நளினி என்பவரை சோதனை செய்தபோது சோதனை செய்தபோது அவரிடம் ரூ.810 பணம் இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் மேற்படி பணம் சரியாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி தொகைக்கு தக்க முகாந்திரம் கூறியதால் ரூ.810 பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 5) கேமரா ஆபரேட்டர் திரு.பூ.கணேசன் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூ.500

பணம் இருந்தது. இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் ரொக்கப்பதிவேட்டுடன் ஒப்பீடு செய்து பார்க்க அதில் மேற்படி பணம் சரியாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி தொகைக்கு தக்க முகாந்திரம் கூறியதால் ரூ.500 பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 6)சார்பதிவாளர் அவர்களால் தன்னிச்சையாக பணிக்கு அமர்த்தப்பட்ட இளநிலை உதவியாளராக பணிபுரிந்து ஓய்வு பெற அனுமதிக்கப்படாத திரு.ஜெயரட்சகன் த.பெ ஆதிமூலம், குன்னம், பெரும்பாக்கம் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் பணம் ஏதும் இல்லை.7) புரோக்கர் திரு.செல்வம் த.பெ ராதாகிருஷ்ணன், ராகவேந்திரா நகர், சித்தேரிக்கரை, விழுப்புரம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.300/- (200X1,100X1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 8)திரு.சரவணன் த.பெ மதுரைவீரன், சன்னதி தெரு, மயிலம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.8,000/-(500X15, 200X1,100X2,50X2)) பணம் இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 9) தனிநபர் திரு.வெங்கடேசன் த.பெ நாகப்பன், தென்புத்தூர், செஞ்சி வட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.400/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் தக்க முகாந்திரமும் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 10)திரு.முனுசாமி த.பெ கண்ணையன் கூட்டேரிப்பட்டு என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,700/ இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க, அவர் தக்க முகாந்திரமும் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 11)திரு.ராமகிருஷ்ணன் த.பெ ராமசாமி, நெடிமொழியனூர், திண்டிவனம் வட்டம் என்பவரை சோதனை செய்தபோது அவரிடம் ரூபாய்.1,900/- இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் மேற்படி பணம் குறித்து தக்க முகாந்திரம் தெரிவித்ததால் மேற்படி தொகை அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 12)பின்பு மயிலம் சார்பதிவாளர் திருமதி.வெ.வெங்கடேஸ்வரி, அவர்களின் மேசையினை என்பவரை சோதனை செய்தபோது மேசை துணிக்கு அடியில் ரூபாய்.1,00,000/- (500X200) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 13) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு.ஹ.வீர அப்துல்லா என்பவரின் மேசையினை சோதனை செய்தபோது மேசை அருகில் உள்ள ஜன்னல் அருகில் ரூபாய்.1.100/- (500X2,100X1)இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 14) கேமரா ஆபரேட்டர் திரு.பூ.கணேசன் அமர்ந்திருந்த மேசையினை சோதனை செய்தபோது மேசை அருகில் உள்ள ஜெராக்ஸ் மெஷின் கீழ் ரூபாய்.10,540/- (500X20,200X1,100X3,20X2) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 15) அலுவலக உதவியாளர் திரு.ஜெ.பாலசுப்ரமணியன் அமர்ந்திருந்த மேசையினை சோதனை செய்தபோது மேசை அருகில் உள்ள ஜன்னலின் கீழ் ரூபாய்.2,200/- (500X4,200X1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது 16)அதன் பின்பு, மயிலம் சார்பதிவாளர் இருக்கைக்கு எதிரில் உள்ள அறையினை சோதனை செய்தபோது அவ்வறையில் இருந்த ஸ்டீல் பீரோவில் சில்வர் டப்பாவில் ரூபாய்.8,200/- (500X16,200X1) இருந்தது. மேற்படி தொகை குறித்து அவரிடம் கேட்க அவர் எந்தவித முகாந்திரமும் தெரிவிக்காததால் மேற்படி தொகை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது மேலும், மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினை உட்புறத்தினை சோதனை செய்ததில் வேறு எந்த கைப்பற்றக்கூடிய பொருளோ, பணமோ ஏதும் இல்லை. மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினை சோதனை செய்யப்பட்டதில் கைப்பற்றப்பட்ட பணமானது,

| வ.எண் | கைப்பற்றப்பட்ட பணம் |
|---|---|
| 1) | ரூ.300/- |
| 2) | ரூ.8,000/- |
| 3) | ரூ.1,00,000/- |
| 4) | ரூ.1,100/- |
| 5) | ரூ.10,540/- |
| 6) | ரூ.2,200/- |
| 7) | ரூ.8,200/- |
| ஆக மொத்தம் | **ரூ.1,30,340/-** |

இந்த திடீராய்வின்போது மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான **ரூ.1,30,340/-**(ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரத்து முந்நூற்று நாற்பது மட்டும்) ஆனது பத்திரப்பதிவுக்கு வரும் பொதுமக்களிடம் இருந்து இலஞ்சமாக பெற்றிருக்க கூடும் என விசாரணையில் தெரிய வருவதால் மேற்படி தொகையினை மேல் விசாரணைக்காக கைப்பற்றினேன். பின்பு மயிலம் சார்பதிவாளர் அலுவலத்தில் இருந்த பதிவேடுகளான G கணக்குப் பதிவேடு, மற்றும் H கணக்குப் பதிவேடு, ஆகியவற்றை பார்வையிட்ட போது பதிவேடுகளில் குறிப்பிட்டுள்ள தொகைகள் அனைத்தும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டுள்ளது. ரொக்கமாக எந்த தொகையும் இவ்வலுவலகத்தில் பெறப்படவில்லை. மேலும் விசாரணைக்காக மயிலம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024, தனி நபர் ரொக்க பதிவேடு-2024, மற்றும் இயக்கப்பதிவேடு-2024 ஆகியவை

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பிறகு, அலுவலகத்தில் இருந்த மயிலம் சார்பதிவாளர், அலுவலக பணியாளர்கள் மற்றும் அலுவலகத்தினுள் இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்த திடீராய்வின்போது அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு தொடர்பாக பொதுமக்கள் புகார்கள் தெரிவிக்க வேண்டிய ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலகத்தின் விபரம் அலுவலகத்தில் வைக்கப்படவில்லை. மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தின் இருந்தவர்கள் அனைவரும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டார்கள். அலுவலக பெண் ஊழியர்கள் விழுப்புரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளரால் உதவியுடன் விசாரணை செய்யப்பட்டார்கள். மேலும் அலுவலக உடமைகளுக்கு எவ்வித சேதங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்பது உறுதி செய்யப்பட்டது. இந்த செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் வாக்குமூலங்கள் விழுப்புரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு மடிக்கணினியில் நான் சொல்ல உதவி ஆய்வாளர் திரு.அ.சக்கரபாணி என்பவரால் தட்டச்சு செய்யப்பட்டது. இந்த திடீராய்வு மகசர் இன்று 07.11.2024-ம் தேதி சுமார் 18.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 07.11.2024-ம் தேதி சுமார் 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சம்பவங்கள் அனைத்தும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள திடீராய்வு மகசரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திடீராய்வின்போது மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தினை சோதனை செய்தபோது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத தொகையான மொத்தம் **ரூ.1,30,340/-**(ரூபாய் ஒரு லட்சத்து முப்பதாயிரத்து முந்நூற்று நாற்பது மட்டும்) கைப்பற்றப்பட்டது சம்மந்தமாக 1) மயிலம் சார்பதிவாளர் திருமதி.வெ.வெங்கடேஸ்வரி 2) டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் திரு.ஹ.வீர அப்துல்லா 3)அலுவலக உதவியாளர் திரு.ஜெ.பாலசுப்ரமணியன் 4) கேமரா ஆபரேட்டர் திரு.பூ.கணேசன் மற்றும் புரோக்கர்கள் 5)திரு.செல்வம் த.பெ ராதாகிருஷ்ணன், ராகவேந்திரா நகர், சித்தேரிக்கரை, விழுப்புரம் 6)திரு.சரவணன் த.பெ மதுரைவீரன், சன்னதி தெரு, மயிலம் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள, sd(xxxx) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், கடலூர்.இணைப்பு:1)திடீர் ஆய்வு மகஜர் நாள். 07.11.2024. 2)ரொக்கம் ரூபாய் 1,30,340/-, 3)7-நபர்களின் வாக்குமூலங்கள். 4)மயிலம் சார்பதிவாளர் அலுவலக வருகைப்பதிவேடு-2024 5) மயிலம் சார்பதிவாளர் அலுவலக தற்காலிக பணியாளர் பதிவேடு-2024 6)தனி நபர் ரொக்க இருப்பு பதிவேடு-2024 மற்றும் இயக்கப்பதிவேடு-2024.

Madam,

Received the above computer typed complaint on 08.11.2024 at about 00.30 hrs. Hence, I registered a case in Villupuram Vigilance and Anti-Corruption Cr.No.14/2024/AC/VPM u/s 7 of The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 r/w 106 BNSS at 01.00 hrs today on 08.11.2024.

The original FIR along with the original computer typed complaint in a sealed cover are sent to the Special Judge for cases under The Prevention of Corruption Act, Villupuram and a copy of FIR is submitted to the Director of Vigilance and Anti-Corruption, Chennai.

(G.Alagesan)
Deputy Superintendent of Police,
Vigilance and Anti-Corruption,
Villupuram.